**மாத்தளை பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மாத்தளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாவாண்டிற்குரிய மேலதிக நேர மற்றும் நீர் செயற்திட்ட ஊழியர் படிகளின் மொத்தம் ரூபா 48,366 ஆண்டில் செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டில் செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வாடகைக்கு பெற்றுக் கொண்ட கொங்க்ரீட் கலவை இயந்திரத்துக்காக செலுத்த வேண்டிய ரூபா 30,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | ரூபா 40,000 பெறுமதியான 10 பேர்ச் அளவிலான காணி ஒன்று இரண்டு முறை கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 04 காணிகளின் உறுதியில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| இடையே ரூபா 2,951,524 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | | |
| (ஆ) வைப்பு கணக்கின் பொழிப்பு (பட்டோலை) இன் பிரகாரம் நானாவித வைப்புக்கள் மீதி ரூபா 14,577,968 ஆக இருந்த போதும் ஐந்தொகையில் அது ரூபா 14,877,511 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 299,543 ஆன வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 254,500 கூட்டுத்தொகையான சொத்து விடயமொன்றும் ரூபா 22,100 ஆன பொறுப்பு விடயமொன்றுக்குரிய பட்டோலை மீதி உறுதிப்படுத்தும் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படா மையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 15(3) (இ) பிரிவு | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையில் பிரதேச சபை நிறைவேற்றியிருந்த நோக்கங்கள் எதிர்கால எதிர்பார்ப்புகள் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் வளப் பயன்பாடு தொடர்பாக தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கையை மிகவும் செயற்திறனாக மற்றும் இலக்கிடப்பட்ட செயலாற்றல் அறிக்கையொன்றாக பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் 127 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான 13 மயானங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் வேலி எல்லை குறிப்பிடப்படாமல் அதன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு | மயானங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்க | கணக்கீடு செய்து பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருக்கவில்லை ஏனைய மயானங்களை மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்களின் கீழ் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படுமென | |
| (இ)) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் IV ஆம் பிரிவு | ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை முழுமையாக செலுத்திய பின்னர் கடையை குத்தகைக்கு வழங்குவதற்குரிய உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டிய போதிலும் பலாபத்வெல பொது வர்த்தக தொகுதியின் 04 ஆம் மற்றும் 06 ஆம் இலக்க ஆகிய இரண்டு கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது ஒரே தடவை தொகை மற்றும் அதற்கான வட்டியாக காணப்பட்ட ரூபா 298,900 தொகையை அறவிடாமல் குத்தகையாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | தற்போது அனைத்து கடைகளுக்குமாக குத்தகை உடன்படிக்கை முறைப்படி இரு தரப்பினரும் கையொப்பமிடப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் ஒரே தடவை பணம் அறவிடப்பட வேண்டும் |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின். 3.1 ஆம. பிரிவு | சபைக்கு சொந்தமான ஓட்டத்தில் காணப்படுகின்ற 07 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை | எரிபொருள் எரிவு பரிசோதனையை உரியகாலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 58,303,615 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 55,243,576ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,349,000 | 1,167,566 | 1,345,721 | 560,127 | 6,151,000 | 5,595,133 | 5,462,926 | 887,245 |
| (ii) | வாடகை | 250,000 | 334,775 | 327,320 | 15,390 | 1,980,000 | 432,980 | 445,985 | 8,200 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,200,000 | 980,996 | 978,996 | 2,000 | 2,725,000 | 1,692,088 | 1,692,088 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 100,322,500 | 99,193,523 | 99,619,998 | 59,349,854 | 89,163,000 | 78,734,995 | 54,173,708 | 59,859,207 |
| | | 103,121,500 | 101,676,860 | 102,272,035 | 59,927,371 | 100,019,000 | 86,455,196 | 61,774,707 | 60,754,652 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **வீதவரி**<br>வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 1,000 இற்கு மிகைத்த நிலுவையாக இருந்த 126 ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 220,858 ஆன வீதவரி மீதியொன்று அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஆதனங்களைத் தடை செய்து வீதவரி அறவிடுவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஏனைய வருமானம்**<br>சபைக்குரிய செயலற்ற நிலைமையில் காணப்படும் 05 நீர் முன்மொழிவு முறைகளில் 344 நீர் பாவனையாளர் களிடமிருந்து 6 ஆண்டுகளுக்கும் 11 இற்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாக உள்ள ரூபா 1,150,768 ஆக இருந்தது | அறவிட முடியாத நீர் முன்மொழிவு முறைகளில் காணப்படும் நிலுவை கட்டணங்களை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக | நிலுவை கட்டணங்களை அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 3 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 4,607,917 ஆக இருந்தது. | நீண்டகாலமாக நிலுவையை மீதிகளைப் பதிவழிப்பதற்கும் ஏனைய மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 31,313,412 ஆக இருந்தது. | அமைச்சில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தை எதிர்காலத்தில் பெற்று ஒப்பந்த சங்கத்துக்கு வழங்குவதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2,433,600 ஆன 07 காணிகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை | கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | காணிகளின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |
| (ஈ) விஷால் மாத்தளை நீர் செயற்திட்டத்தின் வீதி பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்பு நிர்வாக செலவினத்துக்காக தேசிய நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையிடமிருந்து கிடைத்திருந்த பணத்திலிருந்து எவ்வித கடமையன்றோ மேற்பார்வை என்றோ செய்யப்பட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்காமலும் அங்கீகாரமின்றியும் தலைவருக்கும் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபாய் 2,215,053 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் கோவையிலும் ஆவணங்களிலும் உறுதிப்படுத்தியுள்ளதாக | இந்நிகழ்ச்சித் திட்டத்தையே மேற்பார்வை செய்தமைக்கான தெளிவான மற்றும் முறையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 3.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் உள்ள மயான பூமியின் அளவு எவ்வளவு என்பதை உறுதிப்படுத்துவதற்காக முறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத இருந்ததுடன் தற்போது அடக்க நடவடிக்கைகள் மற்றம் தகண கிரியை களுக்காக பயன்படுத்தப்படுகின்ற 13 மயானங்களின் உரித்தை கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | சபைக்குரிய மயானங்களை இனங்கண்டு உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 23 வெற்றிடங்களும் 07 பதவிகளில் 22 மிகைகளும் காணப்பட்டன. | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களுக்காக நிரந்தர அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்ற வந்த, இடமாற்றம் பெற்றுச் சென்ற, 10 உத்தியோகத்தர்களிடமிருந்து 2 வருடங்கள் மதல் 3 ½ வருட காலம் கடந்திருந்துள்ள கடன் மீதிகளனி மொத்தம் ரூபா 1,855,451 ஆன கடன் மீதி தீர்வு செய்யப்ப்டிருக்கிவல்லை. அத்துடன் அந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட்ட மொத்தம் ரூபா 715,278 ஆன தவணை தொகைபொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | கடன் மீதிகளைத் தீர்வு செய்து கணக்குகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன் மீதி தீர்வு செய்யப்பட க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 56 செலவின விடயங்களில் 57 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 32 வருமான விடயங்களில் 49 சதவீதம் முதல் 100 சதவீதத்தை மிகைத்த விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியாக பயன்படுத்தப்படும். | கவனத்துடனும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டும் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |